CC.No. 174/2022
PW – 5
26.05.2026
பெயர் : சரவணகுமார்
த/பெ. : சீனிவாசன்

__குறுக்கு விசாரணை__

விபத்து சம்மந்தமாக காவல்நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. நகர காவல் நிலையத்தில் வைத்து விபத்து சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். விபத்து நடந்த அன்றும் மறுநாளும் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

புகாரை என்னை கொடுக்க சொல்லவில்லை. எனது வீட்டில் இருந்து விபத்து நடந்த இடம் சுமார் 2 ½ கி.மீ தூரம் இருக்கும். அரசு மருத்துவமனையில் இருந்து பழனியப்பா பஸ் நிறுத்தம் வரையில் தென்வடல் ரோடு சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும் என்று சொன்னால் சரிதான். மேற்படி 1 கி.மீ தூரத்திற்குள் 4 பிரிவு சாலைகள் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

தாவா விபத்து 4வது பிரிவு சாலை அருகே நடந்தது என்று சொன்னால் சரிதான். பிரிவு சாலையில் இருந்து வரும் நபர்கள் மெயின்சாலையில் வரும் வாகனங்களை கவனித்துதான் கவனமாக வரவேண்டும் என்று சொன்னால் சரிதான்.

விபத்து இரவு 11.00 மணிக்கு மேல் நடந்தது என்று சொன்னால் சரிதான். அந்த சமயத்தில் ஆள் நடமாட்டம் குறைவாக இருக்கும் என்று சொன்னால் சரிதான். விபத்து தேதியில் விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் நடைபெற்றதால் ஆள் நடமாட்டம் அதிகமாகவே இருந்தார்கள்.

நான் நின்று கொண்டிருந்த இடத்திற்கு நேரெதிரே நகர காவல் நிலையம் இருந்தது. பிரதான சாலையில் பேருந்து வந்து கொண்டிருந்தபோது பிரிவு சாலையில் இருந்து இரு சக்கர வாகனத்தில் வந்த நபர்கள் பேருந்தின் மீது மோதிவிட்டார்கள் என்று சொன்னால் அது தவறு. பிரிவு சாலையில் இருந்து இரு சக்கர வாகனத்தில் வந்த நபர்கள் வலதுபுறம் திரும்பியபிறகு பேருந்து

அவர்களுடைய இரு சக்கர வாகனத்தில் பின்புறம் மோதிவிட்டது.

நான் சொல்வது போல் இரு சக்கர வாகனத்தின் பின்புறம் பேருந்து மோதவில்லை என்று சொன்னால் சரியல்ல. இரு சக்கர வாகனத்தில் வந்த நபர்கள் தான் வேகமாக வந்து பேருந்து வாகனத்தின் மீது மோதிவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.

இரு சக்கர வாகனத்தில் வந்த நபர்கள் எனக்கு சிறுவயதில் இருந்தே தெரியும். விபத்தில் இறந்துபோனவரின் அண்ணன் எனக்கு நன்கு பழக்கம். விபத்து சமயத்தில் என்னுடன் நின்று கொண்டிருந்ததாக சொல்லும் நபர்களுக்கு வயது சுமார் 35 இருக்கும்.

நான் சம்பவ இடத்தில் இல்லை என்று சொன்னாலும், சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று சொன்னாலும், இறந்துபோனவருக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

Sd/– சரவணகுமார்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.

CC.No.174/2022
PW – 6
26.05.2026
பெயர் : ராஜா
த/பெ. : ராமசாமி

<u>குறுக்கு விசாரணை</u>

விபத்தில் இறந்துபோன முத்துக்கருப்பன் எனக்கு உறவினர் அல்ல. அவர் எனக்கு நண்பரும் அல்ல. அவருடைய பெற்றோர் எந்த ஊர்க்காரர்கள் என்று எனக்கு தெரியாது.

முத்துக்கருப்பனின் அம்மா எனக்கு உறவனிர் என்று சொன்னாலும் அதை மறைத்து பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து தான் போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். காவல் நிலையத்திற்கு நான் மட்டும்தான் சென்றேன்.

நான் காவல் நிலையத்தில் வைத்துதான் கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– ராஜா

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.
Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.

CC.No. 174/2022
PW – 7
26.05.2026
பெயர் : சக்திதாஸ்
த/பெ. : செல்வராஜ்

**குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்துபோன முத்துக்கருப்பன் எனக்கு உறவினரோ நண்பரோ அல்ல. அவருடைய பகுதியில் அவரை பார்த்துள்ளேன். சம்பவ இடத்தில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

விபத்தில் இறந்துபோன நபர் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவ இடத்தில் வைத்து நான் கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/– சக்திதாஸ்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.
Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.